எவ்வளவு, எத்தனை கோடி ரூபாய்கள் என்பதை எல்லாம் விசாரித்தாக வேண்டும். இது இரண்டு மாநிலங்களுக்கு இடையே நடக்கின்ற பிரச்சினையாகையால் சி.பி.ஐ. கொண்டு விசாரணை நடத்த வேண்டும் என்று மத்திய அரசுக்கு கோரிக்கை விட வேண்டும். அதன் மூலமாக முழுமையான, வேகமான, விரைவான, நேர்மையான விசாரணையை நடத்தி இந்தக் குற்றவாளிகளை நீதிமன்றத்தின் முன்னே நிறுத்துவதற்கு வழி காண வேண்டும் என்று சொல்லி, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

[பிற்பகல் 12-30]

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவையின் அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் விவாதத்தில் பேசி பதில் அளிப்பதற்கு நேரம் இல்லை. எனவே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் 2-2-1981 அன்று தொடரும். அன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.

நாளை 31-1-1981 அன்று ஏற்கனவே அறிவித்தபடி தமிழ் நாடு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீது விவாதம் நடைபெறும். 2-2-1981 அன்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் முடிந்தபின், மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம் தொடர்ந்து, தேவையானால் அன்று பிற்பகலிலும் பேரவை கூடி மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம் தொடரும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12.32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

172. மேட்டுபாளையத்திலுள்ள அங்காடியைக் காரமடைக்கு மாற்றவதுப் பற்றிவீ வேளாண்மைத் துறையின் 29-12-1972 ஆம் தேதியிடப் பெற்ற II–1/148 1973 ஆம் எண் அறிவிப்பில் திருத்த மொன்று செய்வதுக் குறித்து, வேளாண்மைத் துறையின் 1-9-1980 ஆம் தேதியிடப்பெற்ற 1736 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23 1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப பெற்றது.]